Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 36 இதழ் - 6 ஜுன் - 2023

தனிப்பிரதி
ரூ.10/-



## ஜூன் 10,11 - 2023 அன்று திருக்கண்டலம் மற்றும் பெரியபாளையம் பகுதியில் நடந்த மருத்துவ முகாமின் போது....





### ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஆராதனையின் அர்த்தம் | 11 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. ஒற்றுமை கொள்ள ஓர்... | 23 |
| 7. உன்னை உயர்த்தி அழகு... | 28 |
| 8. ஒன்று செய்கிறேன்... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 36 June - 2023 Issue - 6**


ஆசிரியர் உரை

## நீ ஏன் இதைச் செய்தாய்?

**அ**ண்ட சராசரங்களை அற்புதமாய் படைத்துப் பங்கமில்லாமல் பராமரித்துப் பாதுகாத்து வரும் பரலோக தேவனுடைய எதிர்பார்ப்பைப் பேதமில்லாமல் பாழ்படுத்திக் கொண்டிருக்கும் இப்பூலோக மாந்தர்கள் தங்கள் பாழுலக வாழ்வின் பல நிலைகளில் செய்ய வேண்டியவைகளைச் செய்யத்தக்க அளவுக்குச் செய்யாதவர் களாகவும், செய்யக்கூடாதவைகளை எல்லை தாண்டிச் செய்கிறவர் களாகவுமே வாழ்ந்து வருகின்றனர். இக்காரியத்தில் யாருக்காவது விதிவிலக்கு அளிக்க முடியுமா என்று விழி பிதுங்கத் தேடினாலும் விரக்தியே மிஞ்சுகிறது. ஏனெனில், ஒட்டுமொத்த மானிடத்தின் தனிப்பட்ட வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும் இன்னும் ஆன்மீக வாழ்வும் அதல பாதாளத்தை நோக்கி வெகு விரைவாக போய்க் கொண்டிருக்கிறது. ஆம், பவுலடியாரின் **நீதிமான் ஒருவனாகிலும் இல்லை** [ரோமர் 3:10] என்னும் கூற்று உண்மையிலும் உண்மையாய் இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், தங்களைத் தேவபக்தியுள்ளவர்கள் என்று எண்ணிக்கொண்டும், வாய் நிறைய சொல்லிக் கொண்டும், பிறர் காணக் காட்டிக்கொண்டிரு ப்பவர்களும் சீர்கெட்ட இவ்வரிசைக்கு சொந்தக்காரர்களாகவே உள்ளனர்.

இப்படிப்பட்டவர்களில் ஒருவனாக நம் கண் முன்னே வந்து நிற்பவன்தான் யோனா தீர்க்கன். பழைய ஏற்பாட்டு தீர்க்கர்களில் கிறிஸ்தவ சமுதாயத்தால் அதிகமாக அறிந்து வைக்கப்பட்டி ருப்பவர்களில் இவனும் ஒருவன். இவன் ஒரு தீர்க்கன் என்பதைத் தாண்டி தீர்க்கனுடைய மகனாகவும் இருந்துள்ளான் [2 ராஜா. 14:25] தேவனுடைய வாயாக இருந்து தேவனுடைய வார்த்தைகளை தேவனுக்காகப் பேசி தேவனுக்காக செயல்படுபவனே தீர்க்கன்.

தன் தகப்பனும் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபடியால், தீர்க்கனுடைய ஊழியம் பற்றிய சரியான புரிதல் இவனுக்கு இருந்திருக்க வேண்டும். ஆனால் யோனா தீர்க்கதரிசியின் செயலைப் பார்த்துத் தேவனை அரைகுறையாக அறிந்த அந்நிய மக்கள் ஒரு கட்டத்தில் **நீ ஏன் இதைச் செய்தாய்?** என்று கேட்டுத் தலைகுனிய வைத்துள்ளனர்.

இந்த அந்நிய மக்கள் யோனாவைப் பார்த்துக் கேட்ட கேள்வி, தேவன் ஆதித் தாயாகிய ஏவாளைப் பார்த்துக் கேட்ட கேள்வியாகிய, **நீ இப்படிச் செய்தது என்ன?** என்ற கேள்வியை நினைவு படுத்துகிறது [ஆதி. 3:13]. தேவன் ஏவாளைப் பார்த்து இப்படிக் கேட்டதும், அந்த அந்நிய மக்கள் யோனாவைப் பார்த்துக் கேட்டதும் கிட்டத்தட்ட ஒன்று தான். செய்யக்கூடாததை நீ ஏன் செய்தாய், இப்படி செய்யும் படியான துணிகரம் எப்படி வந்தது? என்பதே இக்கேள்விகளின் பொருள்.

இப்பொழுது நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணித் தகவல்களுக்குள்ளாகக் கடந்து வந்து விடலாம்.

**புறா** என்று பொருள் தரும் **யோனா** என்னும் பெயரை இவன் தாங்கியிருந்தாலும், அதே புறாவை அடையாளப்படுத்தும் அப்பாவித்தனமும், சமாதானமும் இவனுக்குச் சம்பந்தமில்லாத தாகவே இருந்தது. இவன் காரியங்களை நாம் கவனிக்கும்போது, இவனை ஒரு விசித்திரமும், தனித்துவமும் கொண்ட தீர்க்கன் என்று சந்தேகமில்லாமல் சொல்ல முடியும். ஆம் அந்நிய மண்ணில் அந்நிய மக்களுக்காகத் தீர்க்கதரிசனம் உரைக்கத் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரே தீர்க்கன் இவன் தான். இவன் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பின மக்களைக் கண்டு மனம் நொந்து வருந்தின ஒரே தீர்க்கனும் இவன் தான். இன்னும், தேவச் செயலை ஏற்க மறுத்துத் தன் கோபத்தை வெளிப்படுத்தின தீர்க்கனும் இவனே. தேவ விருப்பத்தையும், தேவ கட்டளையையும் நிறைவேற்றுவதே ஒரு தீர்க்கனின் வேலை. தீர்க்கதரிசியின் மகனாக இருந்த இவன் மீது தேவன் நம்பிக்கை வைத்து, தன் ஊழியப் பணிக்காகத் இவனைத் தெரிந்து கொண்டு அனுப்பச் சித்தம் கொண்டார். ஆனால், இவனோ தேவன் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்து, அழைத்த தேவனுடைய **சமூகத்தை விட்டு விலகினான்.** அக்காலத்தில் மகாப் பெரிய நகரமாக இருந்த நினிவேக்குப் போகப் பணித்தால், இவன் தர்ஷீசுக்குப் போகும்படி அவர் சமூகத்தை விட்டு விலகினான். 1:3-ல் மட்டும் ''விலகினான்'' என்று இரண்டு முறை வருகிறது. தேவனுடைய மனிதன் என்று கருதப்பட்டவனுக்கு, உம்டைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், **உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு என்னும் வார்த்தைகள்** [சங். 15:11] எப்படி இவனுக்குத் தெரியாமல் போனது?

அங்கே தர்ஷீசுக்கு போகிற கப்பலைக் கண்டு, **கூலி** கொடுத்துக் கப்பல் ஏறினான். தேவனுக்கு விரோதமாக ஒருவன் செயல்பட விரும்பும் போது வாய்ப்புகள் எப்பொழுதும் காத்திருக்கும் போல் தெரிகிறது! ஒரு தீர்க்கதரிசிக்கான வருமானம் கர்த்தர் பேரால்

கிடைப்பது. அதாவது, அது கர்த்தருடைய பணம். கர்த்தருடைய பணத்தைக் கர்த்தருக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறான். எப்படிப்பட்ட தேவ மனிதன் பாருங்கள்! ஆனால், தேவ சமூகத்திலிருந்து விலகி இவன் போகத் திட்டமிட்ட இடத்திற்கு இவனால் போக முடிந்ததா? அது ஒருபோதும் நடக்காது. தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் (கலா.6:7)

சும்மா இருப்பாரா, கர்த்தர்? பெருங்காற்றை வரவிட்டார். அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று (1:4). அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து, பாரத்தை லேசாக்கும்படி கப்பலிலிருந்த சரக்குகளைக் கடலில் எறிந்து விட்டார்கள். யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான். அடடா, என்ன தூக்கம் அது! கப்பல் உடையத்தக்கதாக அலைமோதுவதும், உயிருக்குப் பயந்து சக பயணிகளும், கப்பற்காரர்களும் ஓங்கி ஓலமிடுவதும் இவனை மருத்துக்கூட ஏன் என்று கேட்கவில்லை. தன்னைச் சுற்றி நடக்கிற காரியங்கள் எதுவும் இவனை நெருங்காத அளவு உணர்வும், சொரணையும் அற்றவனாக மாறிவிட்டான். தேவனை விட்டு ஒருவன் விலகும்போது சரீர வாழ்விலும், ஆன்ம வாழ்விலும் இப்படித்தான் நடக்குமோ?

ஆறாம் வசனத்தில் **மாலுமி அவனிடத்தில் வந்து: நீ நித்திரை பண்ணுகிறதென்ன? எழுந்திருந்து "உன் தேவனை" நோக்கி வேண்டிக்கொள். நாம் அழிந்து போகாதபடிக்குக் கடவுள் ஒருவேளை நம்மை நினைத்தருளுவார்** என்றான் (1:6). இந்த இடத்தில், தீர்க்கதரிசி யோனா ஓர் அருமையான வாய்ப்பை நழுவ விடுகிறான். ஆம், மெய்யான தேவனைப் பற்றி மாலுமிக்கும், கப்பலிலிருந்தவர்களுக்கும் அறிவுக்கும்படியான வாய்ப்பு. எங்கள் தேவர்களால் எங்களைக் காப்பாற்ற முடியவில்லை, ஒருவேளை, உன் தேவனால் காப்பாற்றப்படலாம் என்றே கூறுகிறான் மாலுமி. **ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்** சங்.(50:15) என்னும் ஆசாபின் வார்த்தைகள் ஏன் நினைவுக்கு வராமல் போயிற்று?

தீர்க்கனின் தவறால் அவர்கள் சீட்டுப்போடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் (வசனம் 7) சீட்டுப் போடும் நடைமுறை அன்றைக்கு வழக்கத்தில் இருந்த ஒன்று (எண். 26:55, யோசுவா 7:14, நீதி. 16:33). வேதாகமத்தில் சீட்டுப் போடுதல் பற்றி நாம் 70 முறைக்கும் மேலாகப் பார்க்க முடியும். சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது தான் தாமதம், இந்தத் தீர்க்கனை அவர்கள் கேள்விகளால் துளைத் தெடுத்தனர். உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன இனத்தான்? என்று கேட்டனர். இந்நான்கு கேள்விகளில் ஒரே ஒரு கேள்விக்குத்தான் நேரிடையான பதில் கொடுக்க முடிந்தது, **நான் எபிரெயன்** என்று.

அதுவரைக்கும் சரி, அடுத்து நெஞ்சும், குடலும் அஞ்சாமல் ஒன்று சொல்கிறான் பாருங்கள். ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் உள்ளது. **சமுத்திரத்தையும், பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன்** என்று (1:9). எப்படி இவனால் இப்படி பச்சைப் பொய் பேச முடிந்தது என்று சுத்தமாக தெரியவில்லை. கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவனாம். இப்படிப்பட்ட கேடான மனநிலை இருந்தபடியால் தான், கடல் கொந்தளித்த நிலையிலும் அயர்ந்து தூங்கியிருப்பானோ?! அவன் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப் போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் மிகவும் பயந்து, அவனை நோக்கி: **ஏன் இதைச் செய்தாய்** என்றார்கள் (யோனா 1:10).

இங்கே கவனியுங்கள் : மாலுமியும், கப்பலாட்களும் **உயிருக்குப் போராடிக்** கொண்டிருந்த நிலையில் சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. அப்பொழுது அவர்கள் **நீ ஏன் இதைச் செய்தாய்**? என்று கேட்கவில்லை. மாறாக, கர்த்தருடைய சமூகத்தினின்று **விலகி ஓடிப் போகிறவன்** என்று அறிந்த மாத்திரத்தில், ''**மிகவும் பயந்து நீர் ஏன் இதைச் செய்தாய்** என்று கேட்டுள்ளார்கள். இந்த அந்நிய ஜனங்கள், யோனாவின் தேவனை எப்படிக் கேள்விப்பட்டு அறிந்தார்களோ தெரியவில்லை. ஆனால் அந்த மெய்யான தேவனுக்கு அவ்வளவு பயப்பட்டுள்ளார்கள். தங்கள் உயிரை விட யோனாவின் தேவனுக்குப் பயந்துள்ளார்கள். இவர்கள் ராகாப் வேசி போல ( யோசுவா 2:9-11) எங்கேயோ, யார் மூலமோ மெய்யான தேவன் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்களோ! அவர்களுடைய அந்தக் குறைந்தபட்ச அறிவே அவர்கள் தேவனுக்கு மிகவும் பயப்படும்படியாகச் செய்துள்ளபோது, தீர்க்கதரிசியாகவும், தீர்க்கதரிசியின் மகனாகவும் இருந்த இந்த யோனாவுக்கு தேவனைப் பற்றிய பயம் எப்படி இல்லாமற்போயிற்று? நினிவேக்குச் சென்று எண்ணிலடங்கா மக்களைப் பார்த்து, **தேவனுக்கு விரோதமாக ஏன் பாவம் செய்கிறீர்கள்** என்று கேட்க வேண்டியவனை, அந்நிய ஜனங்கள், **நீ ஏன் இதைச் செய்தாய்**? என்று கேட்கும் நிலைக்குத் தன்னைக் கீழிறக்கிக் கொண்டான். வெட்கக் கேடு!

தேவக் காரியங்களில் துணிகரமான செயல்பாடு ஒருவனை துக்கத்திலும், வெட்கத்திலும் சந்தேகமில்லாமல் கொண்டு போய் நிறுத்தி விடும். தேவன் துணிகரத்தைக் கடுமையாகப் பார்க்கிறார். உபாகமம் 18:19,20 இப்படியாகச் சொல்லுகிறது. ''என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன். சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் **துணியும் தீர்க்கதரிசியும்**, வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன் என்று. இந்த உண்மையை தாவீது உணர்ந்து எச்சரிப்படைந்தபடியால் தான், **துணிகரமான பாவங்களுக்கு அடியேனை விலக்கி காரும்.** அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்திற்கு நீங்கலாயிருப்பேன்'' (சங். 19:13) என்று மன்றாடுகிறான்.

சரி, யோனாவைப் பார்த்து **நீ ஏன் இதைச் செய்தாய்** ? என்று கேட்கப்பட்ட கேள்வியிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I **தனிப்பட்ட வாழ்வில்... நீ ஏன் இதைச் செய்தாய்?**

யோனாவுக்கான கேள்விகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நம் தனிப்பட்ட வாழ்வில் இப்படிப்பட்ட கேள்விக்கு இடம் இல்லாமல் நாம் எச்சரிக்கையாய் வாழ வேண்டும் என்பது.

தேவனுடைய படைப்பில், படைப்பின் சிகரமாக இருப்பவன் மனிதன். இந்த மனிதனைத் **தேவன் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்** (ஆதி. 2:7). பூமியில் பிறக்கும் ஒவ்வொரு ஆண், பெண் இவர்களுக்குள்ளாக தேவன் அழியாத ஆத்துமாவை வைத்துள்ளார். மண்ணினாலே படைக்கப்பட்ட மனிதன் ஒரு நாளில் மண்ணுக்குத் திரும்பினாலும், அழியாத ஆத்துமா தேவனிடத்திற்கு திரும்பிப் போய் என்றென்றும் வாழ்கிறதாகவே உள்ளது. இந்தச் சரீரத்தில் வாழும்போது ஒருவன் செய்யும் எல்லாவற்றுக்கும் ஒரு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். (2 கொரி.5:10)

அப்படியானால், தேவனுக்காக வாழும் நம் ஒவ்வொருவரின் வாழ்வும் எப்படியிருக்கிறது என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தேவதீர்க்கன் என்ற போர்வையில் வாழ்ந்து கொண்டிருந்த யோனா சரியானதொரு பக்தி வாழ்க்கை வாழவில்லை. **பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்** (பிர.9:18) என்பதற்கு ஒட்டுமொத்த எடுத்துக்காட்டாகவே இருந்துள்ளான். தேவனுக்காக வாழ்ந்து, தேவனுக்காகப் பேசும் பெரும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்திருந்தும், துணிகரமான தேவ விரோதச் செயலால் தேவ நாமத்திற்கு இழுக்கைத் தேடினான். ஒரு தேவ மனிதன் தன் வாழ்வில் எப்படி இருக்கக் கூடாதோ அப்படியே ஆரம்ப முதல் இருந்தான். தேவனுடைய வழிகளையும், போதனைகளையும் பின்பற்றி தேவ சமூகத்தில் இருக்க வேண்டியவன் விலகி ஓடி தனக்கும், தன்னோடிருந்தவர்களுக்கும் பெருந்தீமையை வரவழைத்தான். விளைவு, தேவனை அரைகுறையாக அறிந்திருந்த மக்கள், இந்தத் தீர்க்கனைப் பார்த்து, **நீ ஏன் இதைச் செய்தாய்?** என்று கேட்கும் இடத்திற்குத் தன்னைக் கொண்டு போய் நிறுத்திக் கொண்டான்.

அன்பானவர்களே! தேவனுக்கான நம் ஒவ்வொருவரின் வாழ்வும் எப்படியுள்ளது? நம் பக்தி வாழ்வின் அவல நிலையைக் காணும் ஊரும், உலகமும், **நீ ஏன் இதைச் செய்தாய்?** என்று இடித்துக் கேட்கும் செயல்களைச் செய்து கொண்டுள்ளோமோ? இயேசு

ஆண்டவர் தன் ஊழியத்தின் ஆரம்பத்திலேயே, தன்னைப் பின்பற்றும் சீடர்கள் **பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு ஒளியாகவும்** [மத்.8:13,14] இருக்க வேண்டுமென்று போதித்துள்ளார். சீடர்கள் என்ற நிலையைக் கடந்து **கிறிஸ்தவன்** என்னும் உன்னத நிலைக்கு கிறிஸ்துவின் நற்செய்தியால் உயர்த்தப்படும் ஒருவன், **அழைத்த தேவன் பரிசுத்தராயிருக்கிறது போலத் தானும் தன் நடக்கைகளிலெல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும்** [1 பேதுரு 1:15]

ஆகவே, யோனாவைப்போல் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன் என்று வெறுமனே வாயில் சொல்லிக்கொண்டு, செயலில் தேவனுக்கு விரோதமான நிலைப்பாட்டை எடுக்காமல், நம் தனிப்பட்ட பக்தி வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதுவது போல **உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள வைகளவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ள வைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தி யுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துச்** [பிலி. 4.8] செயல்படுத்துவோம்.

## II. குடும்ப வாழ்வில்... நீ ஏன் இதைச் செய்தாய்?

யோனாவுக்கான கேள்வியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், நம் குடும்ப வாழ்வில் இப்படிப்பட்ட கேள்விக்கு இடமில்லாமல் நாம் கவனமாக இருக்க வேண்டும் என்பது.

இன்றைக்கு உலகில் ஏராளமான அமைப்புகளும், நிறுவனங் களும் இருந்தாலும் அவைகளில் தேவனால் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டது குடும்பம் தான். குடும்பங்கள் ஒன்று சேர்ந்து சமுதாய மாகவும், சமுதாயங்கள் பெருகி தேசமாகவும் உருவெடுக்கிறது. இவைகளுள் தேவன் குடும்பத்துக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆதாமையும், ஏவாளையும் இணைத்து முதல் குடும்பத்தை ஏற்படுத்தினார் [ஆதி. 2:24]. குடும்பம் என்பது கணவன், மனைவி மற்றும் பிள்ளைகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பு . குடும்பத் தில் உள்ள ஒவ்வொரு தரப்புக்கும் தேவன் தம்முடைய வார்த்தைகளில் பொறுப்புகளையும், கடமைகளையும் கொடுத்துள்ளார்.

தேவனைத் தங்கள் வாழ்வில் ஏற்று அவர் தம் குமாரனுடைய உபதேசங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறோம் என்று கூறும் குடும்பங்கள் எந்தக் கட்டத்திலும் செய்யக்கூடாதவைகளைச் செய்கிறவர்களாகவும், செய்ய வேண்டியவைகளைச் செய்யாதவர் களாகவும் இருக்கக் கூடாது. இந்தக் கட்டுப்பாடு மீறப்படும் போது தான், கணவன் – மனைவி ஒருவரையொருவர் பார்த்து நீ ஏன் இதைச் செய்தாய்? என்றும், பெற்றோர் – பிள்ளைகள் ஒருவரையொருவர் நோக்கி இதே விதமாகவும் கேட்கும் இழிநிலை ஏற்படும்.

ஒரு கணவன் தன் மனைவியில் கிறிஸ்து சபைக்காக வெளிப் படுத்தின அன்பு போல் **தியாக அன்பு** கொண்டவனாக இருந்து [எபே. 5:25-33], தேவச் சட்டம் மீறப்படாமல் ஆளுகிறவனாக இருக்க வேண்டும் [ஆதி. 3:16]. தன் மனைவியில் பூரண திருப்தி கொண்டு நீதி. 5:18] அவள் தன் வாழ்நாட் காலத்திற்கானவள் என்பதை ஏற்க வேண்டும் [மத். 19: 3-9] அத்தோடு, குடும்பத்தின் சரீரத்தேவைகள் அவனால் சந்திக்கப்படத்தக்க அளவு வருமானத்தை ஈட்டுகிறவனாக இருக்க வேண்டும் [1 தீமோ. 5:18]. இந்த உபதேசக் கோட்பாடுகளி லிருந்து ஒருவர் தடம் புரண்டால் தலைகுனிவு நேர்வதோடு, **நீ ஏன் இதைச் செய்தாய்?** என்று பிறரால் கேட்கப்படும் அவல நிலையும் ஏற்படும்.

ஒரு மனைவிக்கும் இதே விதமான பிரமாணங்கள் உண்டு. கணவனுக்குக் கீழ்ப்படிந்து [1 பேதுரு 3:5,6] பயபக்தியாய் நடந்து [எபே 5:38] கற்புடையவைகளாகவும், வீட்டில் தரித்திருக்கிறவர்களாகவும் [தீத்து 2:5], பிள்ளைகளிடத்தில் அன்பு கூர்ந்து [தீத்து 2:4] வாழ்கிற வளாகவும் இருக்க வேண்டும். வசனங்களின் இப்போதனைகள் காற்றில் விடப்படுமானால், எக்குத்தப்பான கேள்விகள் வந்து சேர்ந்து மரியாதை கெடும். அதுபோலத் தான் பிள்ளைகளும், தேவனுக்குக் கீழ்ப்படிந்து [உபா. 30:2] பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து [எபெ. 6:1-3] அவர்களைக் கனம் பண்ணி [எபி. 12:9] பெற்றோரைப் பராமரிக் கிறவர்களாக இருக்க வேண்டும் [1 தீமோ. 5:4] மீறப்படுமானால், தேவப் பார்வையில் குற்றவாளிகளாவதோடு பிறருடைய ஏச்சுக்கும், பேச்சுக்கும் கேள்விக்கும் இடமளிக்க நேரிடும்.

அன்பானவர்களே! நம்முடைய குடும்ப வாழ்வின் நிலை எப்படிப்பட்டதாக உள்ளது? யோனா போன்று, **நீ ஏன் இதைச் செய்தாய்?** என்று கேட்கும்படியான நிலைக்கு இடமளிப்போமானால், யோனாவின் கதிதான் நமக்கும் ஏற்படும். ஆகையால், நாம் தேவனிடத்தில் பயபக்தியுள்ளவர்கள் என்று சொல்லுகிறவர்களாக இருப்போமானால், யோனா போலில்லாமல் அவருடைய வார்த்தை களின்படி வாழ்கிறவர்களாக இருக்க வேண்டும்.

### III **சபை வாழ்வில்... நீ ஏன் இதைச் செய்தாய்?**

யோனாவுக்கான கேள்வியிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், நம் சபை வாழ்வில் இப்படிப்பட்ட கேள்விக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கவே கூடாது என்பது.

குடும்பம் என்பது ஆறு நாட்களிலான உலகப் படைப்பிற்குப் பிறகு மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டு, தேவனால் ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்கிக் கொடுத்த பின் ஆரம்பமான ஒன்று [ஆதி. 2:18-24]. ஆனால், சபை என்பது தேவனுடைய **அநாதித் தீர்மானத்தின்படி,** அவருடைய **அநந்த ஞானத்தைக் கொண்டு திட்டமிடப்பட்டு** ஏற்படுத்தப்பட்ட ஒன்று [எபே.3:9-11] சபைக்காகக் கொடுக்கப்பட்ட விலை மிகப் பெரியது. இவ்வளவு பெரிய

விலை ஆதிகாலந்தொட்டு எதற்கும் கொடுக்கப்படவில்லை. ஆம், **தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு ஆண்டவருடைய இரத்தம் விலையாகக் கொடுக்கப்பட்டது** (அப். 20:28).

சபையானது, அழைக்கப்பட்டவர்களின் கூட்டம். சபை பெந்தெகொஸ்தே நாளில் கிபி 30 அல்லது 33-ல் எருசலேம் மாநகரில் பேதுரு அப்போஸ்தலருடைய நற்செய்திப் பிரசங்கத்தைக் கேட்டு, நற்செய்தியின் உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானத்தின் மூலமாகப் பாவங்களறக் கழுவப்பட்டு கர்த்தராலே சபையில் சேர்க்கப்பட்டவர்கள் (அப் 2:14-47). இப்படிச் சபையில் சேர்க்கப்படுகிறவர்கள் அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் (1 பேதுரு 2:10) தேவன் வாசம் செய்யும் ஆலயமாகவும் இருக்கிறார்கள் (1 கொரி. 3:16). இது சம்பந்தமாக, பவுலடியார் தீத்துவுக்கு சொல்லும்போது **எதிரியானவன் உங்களைக் குறித்து பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக,** உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வார்த்தைகளைப் பேசுகிறவனாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார் (தீத்து 2:8) பாருங்கள், உலகத்து மக்கள், ஒரு கிறிஸ்தவனைப் பார்த்துக் **குறை சொல்வதற்கு ஒன்றுமேயில்லை** என்று அவர்கள் வெட்கப்பட வேண்டுமாம். ஆனால், யதார்த்த நிலை எப்படியுள்ளது? யோனாவைப் போல் தானே உள்ளது! அவன் தீர்க்கதரிசி என்ற நிலையில் உண்மையாயிராமல் அந்நிய மக்களாலே, **நீ ஏன் இதைச் செய்தாய்** என்று கேட்கப்பட்டது போல, நம்மைச் சுற்றிலுமுள்ள மக்களாலே, **ஒரு கிறிஸ்தவனாக இருந்து கொண்டு** என்ன இப்படிப் பேசுகிறாய்? எப்படி, இப்படி நடந்து கொள்கிறாய் என்று சொல்லும்படியான நிலைதானே காணப்படுகிறது! இது நியாயமா?

அருமையானவர்களே! வேதம் போதிக்கும் பக்தி வாழ்வை, பரிசுத்த வாழ்வை நாம் நடத்தாமல், யோனா போல் நம்மை வெறுமனே பக்தியுள்ளவர்கள் என்று எண்ணி நடந்து கொண்டிருப்போமானால், நிச்சயமாக பரலோக பாக்கியம் பெற முடியாது. நீதியுள்ள நியாயாதிபதியால், **அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அந்நாளில் விரட்டியடிக்கப்படுவோம்** (மத். 7:23).

ஆகவே, யோனாவுக்கான கேள்வி மூலம் கிடைக்கும் பாடங்களை நாம் பயபக்தியோடு ஏற்றுக்கொண்டு, நித்திய வாழ்வுக்கு நாம் நம்மை முற்றிலும் ஆயத்தமாக்குவோம்! ஆமென்!!

✝

# ஆராதனையின் அர்த்தம்

J.C. சோட்

ஆராதிப்பது அல்லது தொழுதல் என்றால், வேதாக மத்தின்படி, ஊழியஞ்செய்தல், துதித்தல், கனம் செய்தல், மகிமைப் படுத்துதல், பக்தி செலுத்துதல் எனப் பொருள். அது அர்த்தள்ள ஆராதனையாக இருக்க வேண்டுமென்றால், ஆராதனையை ஏற்றுக் கொள்ளுகிறவர் நிர்ணயித்தபடியே ஒரு புத்தியுள்ள ஜீவன் அதைச் செய்ய வேண்டும்.

**1. ஊழியத்தின் மூலம் நாம் ஆராதிக்கிறோம்**

ஊழியம் என்றால் இங்கு உதவி செய்தல், கீழ்படிதல், பணிசெய்தல், தொழுதல் எனப்படும். தேவனுடைய பிள்ளையை ஊழியக்காரனாகவும், கர்த்தரை அவனுடைய எஜமானாகவும் வேதாகமம் சித்தரிக்கிறது. பவுல் தன்னைத்தானே ஒரு ஊழியக்காரனாக மீண்டும் மீண்டுமாக சித்தரித்துள்ளார். ''இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல் (ரோமர் 1:1) என அவர் கூறினார். பேதுருவும், யாக்கோபும் இவ்வாறு கூறினர். (2 பேதுரு 1:1: யாக்கோபு 1 : 1) இவர்கள் எல்லோரும் இப்படிக் கூற காரணம் என்ன? தங்களுடைய சகலவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து, அவருக்கு இப்போது ஊழியஞ் செய்வதை இவ்வாறு குறிப்பிட்டனர். நாம் அவ்வாறே செய்ய வேண்டும். ''இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன்'' (ரோமர் 6:22) என பவுல் கூறினார்.

எவ்வாறான ஊழியத்தை கர்த்தர் விரும்புகிறார் எனப் பார்க்க, கீழ்க் கண்ட வேத வசனங்களை நாம் கவனிக்க வேண்டும். ''வெகு மனத்தாழ்மையோடும். மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரை சேவித்தேன்''. (அப். 20:19) 'உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும். சமாதானம், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால், சமாதானத்துக் கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக் கடவோம்.'' (ரோமர் 14 : 16 – 19) அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்:

ஆவியிலே அனலாயிருங்கள்: கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்''. (ரோமர் 12: 11).

நாம் செய்ய வேண்டிய ஊழியத்தைப் பற்றிப் பவுல் எழுதுகிறார். ''அப்படியிருக்க. சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தம் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை''. (ரோமர் 12:1) ''மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள். (எபே. 6:8) தியத்தீரா சபைக்குக் கர்த்தர் கூறும்போது, ''உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன் செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்'' (வெளி. 2: 19) என்றார்.

ஆராதனை ஊழியத்தைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆம், கர்த்தருக்கு நாம் ஊழியஞ் செய்கிறோம் என்ற வகையில் இது சரியே. வேறு கருத்தில் கூறும்போது, நமது வாழ்க்கை மூவதும் தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் கழிகிறது. இவ்விதமாக நமது வாழ்வை அவரை ஆராதிப்பதில் நாம் செலவழிக்கிறோம். ஆனால், நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியவும், அவருடைய வசனத்தின்படி செய்யவும் தவறுவோமானால் எப்படி நாம் ஞாயிற்றுக் கிழமைகளிலும், நம்முடைய வாழ்நாளிலும் அவரை ஆராதிப்போம் என நம்பபடியும்?

**2. கர்த்தரைத் துதித்து நாம் அவரை ஆராதிக்கிறோம்.**

பவுலும், சீலாவும் சிறையில் அடைபட்டிருந்த வேளையில். ''நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்''. (அப் 16 : 25) என வேதாகமம் அறிவிக்கிறது. கர்த்தர் நம்மை எவ்வாறு ஆசீர்வதித்துள்ளார் என்பது பற்றியும், நாம் அவருக்கு செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் பவுல் பேசும்போது, ''மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு'' தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று எழுதுகிறார். (எபே. 1:11) மீண்டுமாக நாம் படிக்கிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்.'' (எபி. 13:15) பேதுரு கூறுகிறார்: ''அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே

சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனம் மகிமையுண்டாகக் காணப் படும்''. (I பேதுரு 1:7) ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுக் கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக: அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயி ருப்பதாக'' (1 பேதுரு 4 : 11).

நமது சகல செயல்களிலும் வார்த்தைகளிலும் தினம் கர்த்தரைத் துதிக்க வேண்டும். முக்கியமாக, நாம் கர்த்தருடைய நாளிலே ஆராதிக்கக் கூடிவரும்போது, குறிப்பாக அவரைத் துதிக்க வேண்டியே நாம் கூடிவருகிறோம். கூடுவதின் மூலமாகவும். இறுதியாக நாம் கூடியிருக்கையில் செய்யும் காரியங்களின் வழியாகவும் அவரை நாம் ஆராதிக்கிறோம். நமது இருதயங்களைத் தாழ்த்தி, நமது வேதவாசிப்பு, ஜெபம், பாடல், கொடுத்தல், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுதல் மூலமாக நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இவற்றை நாம் செய்ய மறுத்தால், நாம் எப்படி அவரை ஆராதிக்க இயலும்?

### 3. கர்த்தரை கனப்படுத்தி நாம் அவரை ஆராதிக்கிறோம்

'குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்'' (யோவான் 5:23) என இயேசு கூறினார். நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனு மாயிருக்கிறவருக்கு, கனம் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்'' (1தீமோ. 1:17) என்று பவுல் எழுதினார்.

நம்மை இரட்சித்திருப்பவரும், ஆசீர்வதிப்பவரும். ஒரு நல்வாழ்க்கையின் நம்பிக்கையை நமக்கு அளிப்பவருமாகிய கர்த்தரை, நாம் கனம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

### 4. கர்த்தரை மகிமைப்படுத்தி நாம் அவரை ஆராதிக்கிறோம்.

மகிமைப்படுத்துவது என்றால் புகழ்தல், கனப்படுத்துதல், துதித்தல் எனப் பொருள். ஆராதனையின் அர்த்தத்திற்கு இவை ஒத்துப் போகின்றன. இக்கருத்தை வலுப்படுத்தும் சில வசனப்பகுதிகளை நாம் மீண்டுமாகக் கவனிப்போம்: ''நீங்கள் ஒரு மனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு,

பொறுமையையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே. நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக. [ரோமர் 15:5:6].

''கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே: ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்'' [I கொரி 6:20] ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்'' [1 பேதுரு 4:16] சகலவற்றிற்கும் நாமே காரணம் என பெருமை பாராட்டுவதை விடுத்து சகல காரியங்களிலும் தேவனை முன்னிலைப்படுத்தி, அவரைப் புகழ்ந்து, கனப்படுத்தி, அவர் நாமத்தை மகிமைப்படுத்துவதே நமது வாழ்வின் லட்சியமாக இருக்க வேண்டும். அவரோடு நம்மை ஒப்பிடும்போது நாம் ஒன்றுமில்லை. கர்த்தரின் நாளில் நாம் கூடி வருவதின் நோக்கம், நமது சிந்தனை முழுவதையும், அவரை நோக்கிச் செலுத்தவும், இவ்வாறாக அவரை ஆராதிக்கவும் தான்.

✝

## ஏன் வேதம் வாசிக்க வேண்டும்



*1. அது தேவனுடைய கட்டளை - (உபா 6:7)*

*2. நம் எண்ணங்களை மாற்றுகிறது - (மத் 22:29)*

*3. நம்மை புடமிடுகிறது - (சங் 105:19)*

*4. நற்குணசாலி ஆக்குகிறது - (அப் 17:11)*

*5. நம் புத்தியை மாற்றுகிறது - (மத் 7:24)*

*6. நம்மை சுத்திகரிக்கிறது - (சங் 119:19)*

*7. சாத்தானை ஜெயிக்க உதவுகிறது - (மத் 4:4)*

*8. நம்மை செழிப்பாக்குகிறது - (சங் 1:3)*

*9. நித்திய ஜீவனை அளிக்கிறது - (யோவா 5:39)*

பெண்கள் பகுதி

# தேவனுடைய பெண்கள் தேவ சித்தத்தை மதிப்பார்கள் !

Sis. ரேச்சல் நாயகம்

நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட குணசாலியான ஸ்திரீ எவ்வளவு அதிகமாக நினைக்கப்படுகிறாள், பாராட்டப்படுகிறாள் என்பது நமக்குத் தெரியும். அந்த ஸ்திரீயினுடைய தொலைநோக்கு, சுறுசுறுப்பு, நற்பண்பு போன்ற வைகள் வெளிக் கொணரப்பட்டி ருக்கின்றன. ஆனால், அனைத்து குணங்களுக்கும் திறவுகோலாய் விளங்குகிறது 30ம் வசனம். சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்''. இங்கு தான் உண்மையான குணசாலி ஸ்திரீ காணப்படுகிறாள். அவள் கர்த்தருக்குப் பயப்படுபவள். நம் தலைப்பின்படி பார்த்தால் கர்த்தருடைய சித்தத்தை மதிப்பவள். ஆக, இந்த ஸ்திரீ எவ்வாறு எந்தெந்த வகைகளில் தேவ சித்தத்தை மதித்து ஏற்றுக் கொள்கிறாள் என்று பார்ப்போம்.

முதலாவது, தேவ சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிறாள். உண்மையான மனமாற்றத்தை பெற்றவளாயிருக்கிறாள். விசுவாசித்து நடக்கிறாள். நீதியை தன் சால்வையாக உடுத்துகிறாள். வேதாகமத்தில் காணப்படும் தேவ பக்தியுள்ள ஸ்திரீகளை உதாரணமாக வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்துகிறாள்.

(1பேதுரு 3:5). தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் (1 தீமோத். 2:10) என்ற வசனத்தின்படி வாழ்கிற ஸ்திரீயே தேவ சித்தத்தை மதித்து நடக்கிற ஸ்திரீயாக கருதப்படுவாள். வேதாகமத்தை அப்படியே தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கும் பெண்களாக நாம் இருக்க வேண்டும். தேவனுடைய பெண்கள் முதலில் தேவசித்தத்தை மதித்துத்தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுகிறார்கள்.

இரண்டாவதாக, தேவ சித்தத்தை அஸ்திபாரமாகக் கொண்டு அதன்மேல் அவள் நிற்கிறாள். யோவான் ஸ்நானகன் நல்ல

தகப்பனையும், தாயையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருந்தான். அவர்களைப் பற்றிக் கூறும்போது, 'அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும், நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் [லூக். 1:6] என்று பார்க்கிறோம். தேவ சித்தத்தின் மீது நின்றார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்தி கூறும்போது பரிசுத்த தேவ எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் [2 தீமோ. 3:15] என்றும், அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டி யாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்தகுள்ளும் நிலைந்திருந்தது [1 தீமோ. 1:5] என்றும் கூறுகிறார். இந்த இளைஞனின் குடும்பத்தில் இருந்த பெண்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுத் தேர்ந்து அதில் நிலைத்திருந்தார்கள். அதிலிருந்து அசையாதவர்களாயிருந்தார்கள். ஒரு ஸ்திரீயினுடைய நிலையான விசுவாசம் அநேக ஸ்திரீகளுக்கு உதாரணமாக இருப்பது மிகவும் மெச்சப்படத்தக்க ஒன்று. எந்த ஒரு சக்தியும் தங்களுடைய விசுவாசத்தையும், தேவனுடைய வார்த்தையின்மேல் உள்ள உறுதிப்பாட்டையும் அசைத்துவிட அவர்கள் அனுமதிக்கவேயில்லை. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளினால் இழப்புண்டு திரிகிற சில பெண்களை சாத்தான் வயப்படுத்தி சபைகளில் பிரச்சனைகளை கொண்டு வருகிறான் என்று [ 2 தீமோ. 3:6] பவுல் கூறுகிறார். எல்லா காரியத்திலும் ஒரு நிலைத்த தன்மை இல்லாமல் தாங்களும் கெட்டுப் பிறரையும் கெடுக்கும் செயலைச் செய்கிறார்கள். தேவனுடைய பெண்கள் ஒரு போதும் இவ்வளவு இழிநிலைக்குச் செல்லமாட்டார்கள். அவர்கள் நிற்பார்கள்.

மூன்றாவதாக, தேவச் சித்தம் அவளுக்குப் போதுமானதாயிருக்கும். தேவ வாக்கியங்கள் எல்லாவற்றிற்கும் போதுமானதாயிக்கிறது என்பதை தேவனுடைய பெண்கள் விசுவாசிக்கிறார்கள், மேலும், எல்லாவற்றிற்கும் பிரயோஜனமானது [2 தீமோ 3:16,17] என்பதை ஏற்று வாழப் பழகிக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் தங்கள் குடும்பத்துக்கும், சபைக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்கள் சபைகளில் செயல்படும் பெண்களாக மற்றவர்களும் செயல்பட இவர்கள் ஆதாரமாய் இருக்கிறார்கள். மேலும், தன் கணவன், பிள்ளைகள் மற்றும் இவர்களும் வேத வசனங்கள் தங்களுக்கு போதுமானது என்று எண்ணும்படி செய்கிறார்கள். இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். இன்றைக்கு நாம் பார்க்கும் பொழுது சம்பந்தப்பட்டவர்கள் வசனத்தைப்

போதுமானது என்று எண்ணவுமாட்டார்கள், பிறரும் வசனத்தின்படி வாழ விடமாட்டார்கள். எப்போதும் சந்தேகத்துடனேயே வாழ்ந்து ஒரு பூரண கிறிஸ்தவர்களாக இராமல் இருப்பார்கள்.

பிரியமானவர்களே! இன்றைக்கு குடும்பங்களாகட்டும், சபையாகட்டும், சமுதாயமாகட்டும் ஒழுக்கத்தோடும், ஆவிக்குரிய விஷயங்களில் மேம்பட்டும் இருக்க வேண்டுமானால் அது பெண்கள் இயக்கங்களின் செயல்பாட்டினாலோ அல்லது அதிகாரம் வாய்ந்த பெண்களாலோ வராது. தேவ சித்தத்தை மதிக்கும் பெண்களால் அத்தகைய காரியங்களை ஆரம்பிக்க முடியும், செயல்பட வைக்க முடியும். எனவே, தேவன் மேல் பிரியம் வைத்து அவர் சொன்ன வார்த்தைகளை ஏற்று அதன்படி வாழ்வோம். தேவனுடைய வார்த்தைகளை மதிக்கக் கற்றுக்கொள்வோம். ஆமென். ✝

## கர்த்தர் எரேமியாவுக்குச் சொன்ன நல் வார்த்தை

- உன்னை அறிந்தேன் – ஏரே 1:5
- உன்னைப் பரிசுத்தம் பண்ணினேன் – ஏரே 1:5
- உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் – ஏரே 1:5
- உன்னை காக்க உன்னுடனே இருக்கிறேன் – எரே 1:8
- உன் வாயில் என் வார்த்தைகளை வைக்கிறேன் – ஏரே 1:9
- பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும்,கவிழ்க்கவும், கட்டவும், நட்டவும் உன்னை ஏற்படுத்தினேன் – ஏரே 1:10
- உன்னை அரணிப்பான பட்டணமும், இருப்புத்துணும் வெண்கல அலங்கமும் ஆக்கினேன் – ஏரே 1:18

# என்ன செய்ய வேண்டும் ?

**Dr. ஏபில் நாயகம்**

பிரியமான வாலிபர்களே! இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! சர்வ வல்ல தேவன் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட தேவனுடைய சித்தம் நம் வாழ்வில் செயல்பட வேண்டும் என்ற ஆசை, நம் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் இருக்கும். ஏற்ற வேளையில் தேவன் நம்மை உயர்த்துவதற்கு அவருடைய பலத்த கரங்களுக்குள்ளாக நாம் அடங்கி இருக்கவேண்டும் என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. அப்படியானால், நம்முடைய வாழ்க்கைக்கான சித்தம் அல்லது திட்டம் என்று தேவன் ஒன்றை வைத்திருக்க, அது நிறைவேற நம் பங்காக சில காரியங்களை நாம் செய்வது அவசியம். உதாரணமாக, கலாத்தியர் 1-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் போது வசனம் 15,16ல் பவுலுக்கான தேவனுடைய திட்டம் என்ன என்பதை வாசிக்க முடியும் (தாயின் வயிற்றிலிருந்தது முதல்) பவுலானவர் புறஜாதிகளுக்கு சுவிஷேம் அறிவிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். அதை அறிந்து கொண்ட பவுல் உடனே மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணாமல் அந்த சித்தத்திற்குக் கீழ்படிந்தது பவுலின் பாணிஆக நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டியது நம், வாழ்க்கைக்காக தேவன் ஒரு திட்டத்தையும், நோக்கத்தையும் நிச்சயம் வைத்திருக்கிறார். ஆனால், அது மட்டும் போதுமானது அல்ல. அது நிறைவேற நம் பங்காக சில காரியங்ளைச் செய்ய வேண்டியது அவசியம். என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி உடனே தோன்றும். எஸ்தரின் வாழ்க்கையிலிருந்து இந்தக் கேள்விக்கான பதில் கிடைக்கிறதா என்று பார்ப்போம்.

எஸ்தரின் புத்தகத்தை வாசித்தீர்களானால் தேவனுடைய வழிநடத்துதல் எவ்வளவு அழகானது என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒருமுறை எஸ்தர் புஸ்தகத்தின் 10 அதிகாரங்களையும் முடிந்தால் வாசித்துவிட்டுத் தொடருங்கள் (1மணி நேரம் கூட ஆகாது).

எஸ்தரைக் கொண்டு இஸ்ரலேவலர்கள் மீட்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். அது எவ்வளவு அழகாய் நிறைவேறுகிறது என்பதை படிக்கும்போது தேவனுடைய வழிநடத்துதல் எவ்வளவு அலாதியானதா என்று காண முடியும்.

பெர்சியர்கள் பாபிலோனியரை வீழ்த்திய பின்னர், பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், இஸ்ரவேலரில் சிலர் சில காலம் பாபிலோனிலேயே தங்கிவிட்டார்கள். அப்படித் தங்கினவர்களில் இருவர் தான், எஸ்தரும், மொர்தெகாயும்.

எஸ்தருக்குப் பதிலாக வேறொரு பெண் ராஜஸ்திரீயாக ஏற்படுத்தப் படவேண்டிய ஒரு கட்டாயம். அதற்கு சாம்ராஜ்யத்தின் பல தேசங்களில் இருந்து பெண்கள் அழைத்து வரப்பட்டார்கள். எஸ்தர் 2-ம் அதிகாரம் வசனம் 12-ல் வாசிக்கும் போது அழைத்த வரப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் ஒரு வருடகாலம் தங்களை சுத்திகரித்துக் கொள்ளவேண்டும். ஆறுமாதம் வெள்ளைப் போளத் தைலத்தினாலும் ஆறுமாதம் சுகந்த வர்கங்களினாலும் ஆயத்தப் படுத்திக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. ராஜாவாகிய அகாஸ்வேரு எஸ்தரின் மீது அன்பு வைத்தபடியால் எஸ்தருக்கு தயையும், பட்சமும் கிடைத்தது (2:17) எஸ்தர் ராஜஸ்திரீயானாள். இவை அனைத்தும் நடந்தேற நான்கு வருடங்கள் ஆனது (1:3-2:16).

பின்னர் எஸ்தர் ராஜஸ்திரீயானது முதல், இப்படிபட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி (4:14) என்று மொர்தெகாய் சொல்லி அனுப்பினாரே, அதுவரைக்கும் சுமார் 5 ஆண்டுகள் கடந்து போனது (2:16, 3:7).

இஸ்ரவேல் அடிமைதனத்திலிருந்த போது பிறந்த ஒரு பெண் குழந்தையை தேவன் எவ்வளவு அழகாய் வழிநடத்தி அந்த பெண் குழந்தை ராஜஸ்திரீயாகி, அவளால் இஸ்ரவேலுக்கு நன்மையான காரியம் நடக்கும்படி செய்தார். ராஜஸ்திரீயாக நியமிக்கபட கொண்டு வரப்பட்ட பல ஸ்திரீகளில் ஒருவளாக இருந்த நிலையிலிருந்து, இஸ்ரவேல் ஜனங்களை காக்கும் நிலை வரும் வரைக்கும் என்னவெல்லாம் நடந்திருக்கிறது!! நன்மைக்கு ஏதுவாக என்று வாசிக்கிறோமே (ரோமர்8:28) உண்மையான அர்த்தம் இதுதானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஏன் அடிமைதனத்திலிருக்கிறேன்? ஏன் ராஜஸ்திரீயாக அழைக்கப்பட்ட கட்டத்தில் இருக்கிறேன்? நான் ஏன் ராஜஸ்திரீயாக வேண்டும்? நான் ஏன் ஒருவருட காலம் சுத்திகரிப்பு செய்யவேண்டும்? என்ற பல கேள்விகள் எஸ்தருக்குத் தோன்றியிருக்கும். சுத்திகரிப்பும், அலங்காரமும் ஒரு நாள் அல்லது ஒரு வாரம் செய்யலாம். ஆனால், ஒரு முழுவருடமும் அதாவது 365 நாட்கள் செய்த வேலையையே செய்வது எவ்வளவு கடினம்?அதை எந்த எந்த முறுமுறுப்புமில்லாமல் செய்திருக்கிறாள். சவாலான சூழ்நிலையிலும் உண்மையாக இருந்திருகிறாள். கொடுக்கப்பட்ட

வேலையை தேவன் குறித்த நாட்கள் வரும்வரை உண்மையாய் செய்திருக்கிறாள். தன் அனுதின வழ்வில் அவள் பங்கில் எந்த குறையும் இல்லாதவாறு நடந்திருக்கிறாள்.

எஸ்தரின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடம், அனுதின வாழ்க்கையில் உண்மையும், உத்தமுமாய் இருப்பது. தேவன் நிர்ணயித்திருந்த காலம் நிறைவேறும் வரை எஸ்தரின் வாழ்க்கையில் உண்மையும் உத்தமும் இருந்தது.

வாலிப பருவத்திலிருக்கிற நமக்கும் அநேக கேள்விகள் மனதில் இருக்கும். நான் ஏன் இந்தப் படிப்பை படிக்கிறேன்? நான் ஏன் இந்த வேலையைச் செய்கிறேன்? ஒரே வேலையை எத்தனை நாட்கள் செய்வது? எவ்வளவு நாட்கள் பொறுமையாய் இருப்பது? என்று பலவிதமான எண்ணங்களும், கேள்விகளும் தோன்றும். நான் படித்த படிப்புக்கும் வேலைக்கும் சம்மந்தம் இல்லை, என் திறமைக்கும் நான் செய்யும் வேலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூட யோசிக்கத் தோன்றும்.

அப்படிப்பட்ட நேரங்களில் இரண்டு காரியங்களை நினைவில் கொள்ளுங்கள். ஒன்று படிக்கிற படிப்பும், செய்யும் வேலையும் தேவன் கொடுத்தவை. இரண்டு தேவன் நம் வாழ்க்கையை அவருடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். நாம் செய்ய வேண்டியது இரண்டு காரியங்கள். ஒன்று, அவருடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வது. இரண்டு, அனுதின வாழ்க்கையில் நாம் செய்யும் சிறு காரியங்களிலும் எஸ்தரைப்போல உண்மையாய் இருப்பது. எந்த முறுமுறுப்பும் இல்லாமல், கொடுக்கப்பட்ட வேலையில், படிப்பில், சூழ்நிலையில் உண்மையாய் இருந்து செயல்படுவது.

இதை நாம் செய்தால், தேவன் நம் வாழ்வில் நிர்ணயித்து வைத்திருக்கும் தருணங்களில் நம்மை உயர்த்துவார். நம் மூலம் அவருடைய நாமம் மகிமைப்படும்படி செய்வார்.

அடிமைத்தனத்திலிருந்து வந்த ஒரு பெண்ணுக்கு ராஜாவின் கண்களிலும், இன்னும் சிலரின் கண்களிலும் தயை கிடைக்கச் செய்தது நம் தேவனுக்கு லேசான காரியமாகவே இருந்தது. அந்த தேவன் நிச்சயம் செய்வார். நம்பிக்கையோடு காத்திருப்போம். அப்படிக்காத்திருக்கும் உங்களுக்கும் எனக்கும் செய்யாமலிருப்பது எப்படி?

✝

சிறுவர் பகுதி

# பொய் சொல்லுதல்!

Dr. பிரெய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்? எப்படி இருக்கீங்க..?

**தா**னியேல் போல தினமும் மூன்று வேளை ஜெபிப்பீர்கள் என நம்புகிறேன். இம்மாதம், பொய் சொல்லுதலை தேவன் எப்படிப் பார்க்கிறார் என்று கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, எனக்கு அன்பான சிறு பிள்ளைகளே, நாம் பொய் சொல்லும்போது அது சிறியதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும் தேவன் மிகவும் அதிருப்தி அடைகிறார். இது குறித்து அப்போஸ்தலர் 5:1–11 வசனங்களில் பார்க்க முடியும். இந்த வேத பகுதியைப் படித்துவிட்டு, பிறகு இக்கட்டுரையைத் தொடர்ந்து படியுங்கள்.

இந்த வேத பகுதியில், அனனியாவும், சப்பீராளும், தாங்கள் விற்ற நிலத்தின் கிரயத்தில் பொய் சொன்ன மாத்திரத்தில் இறந்து போனார்கள். அந்நாட்களில், கிறிஸ்தவர்களாயிருந்தவர்களுக்கு சொந்தமாக நிலபுலங்கள் இருந்தது. அந்நிலங்களை அவர்கள் தங்களுடையதாகக் கருதாமல், தேவனுடையதாக எண்ணி, தேவையிலிருப்பவர்களுக்குக் கொடுக்கும்படியாக அதை விற்று அப்போஸ்தலர்களிடம் கொடுத்தார்கள் (அப்.4:35).

ஆனால், அனனியாவும், சப்பீராளும் தங்களுடைய நிலம் தேவனால் கொடுக்கப்பட்டது என்னும் உண்மையை மறந்து, நிலத்தை விற்று, அதில் ஒரு பகுதியை மறைத்து, எஞ்சியதை அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்து, இவ்வளவுக்குத்தான் விற்றோம் என்று பொய் சொன்னார்கள். அவர்கள் தங்கள் வஞ்சக செயலை தேவன் மேலே இருந்து கவனிக்கிறார் என்பதையும், பேசுகிற பொய்யை தேவன் கேட்கிறார் என்பதையும் மறந்து போனார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித்தார்.

நம்மிடத்தில் இருப்பதெல்லாம் தேவன் நமக்குக் கொடுத்தவைகள் என்பதை நாம் மறவாமல், அவருக்குக் கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். சிறு பொய்யாக இருந்தால் கூட தேவன் பொய்யை வெறுக்கிறார். ஆகவே, நாம் சிறு வயதிலிருந்து பொய் பேசாமல் இருக்கப் பழகி உண்மையே பேசி, சரியானதையே செய்ய வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிகப்பாராக!

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.**

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க அப் . 5:1-11)

1. கணவன் அனனியா செய்த தவறை சப்பீராள் அறிந்திருந்தாளா?

2. தன் கணவன் மரித்தபோது, சப்பீராள் கூட இருந்தாளா?

3. தன் கணவன் மரித்துப்போனதை எப்பொழுது அறிந்து கொண்டாள்?

4. அனனியாவும், சப்பீராளும் என்ன தவறு செய்தார்கள்?

5. அனனியா, சப்பீராள் மரிக்கும் முன் அவர்களிடம் பேசின, அப்போஸ்தலன் பெயர் என்ன?

## நாளும் நடப்பும்

- வரலாறு காணாத வெப்பத்தில் தகிக்கும் உலகம். ஜூன் மாதத்தில் இதுவரை பதிவானதிலேயே இதுதான் அதிகம்!

- அமெரிக்காவின் அதிநவீன பிரிடேட்டர் டிரோன்களை வாங்க மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல்..!

- ஒரே தவணை செலுத்தினால் போதும்: சிக்குன்குனியாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிப்பு.

- கிரீன் கார்டு பெறுவதற்கான தகுதி விதிகளை தளர்த்தியது அமெரிக்கா.

- உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் கிரிக்கெட்: இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி.

கிறிஸ்து என்னும் மார்க்கம்
பாடங்கள்

# ஒற்றுமை கொள்ள ஓர் அழைப்பு

சகோ. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

## முன்னுரை

1. இன்றைக்குக் கிறிஸ்தவ சபைகள் என்பவைகள் அநேக பெயர்களில் பிரிந்திருக்கிறதே. அது ஏன் என்று எப்பொழுதாவது நாம் சிந்தித்திருக்கிறோமா?
2. இதற்குக் காரணம்: வேதத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளுதல், அதனால் வரும் வித்தியாசமான உபதேசங்கள், அதிகாரச் சண்டைகள், வெவ்வேறு முறையான ஆராதனைகள், பண நிர்வாகங்கள், இன்னும் வெவ்வேறு காரணங்கள் ஆகும்.
3. ஒரு குறிப்பிட்ட சபையில் சேர்ந்துகொள்ள அந்தச் சபையின் ஒழுங்கு மற்றும் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பார்கள். ஆனால், அவை வேதத்தோடு ஒப்பிட்டு சரியா என்று ஆராய வேண்டும். அதைச் செய்யமாட்டார்கள்.
4. ஒரு பெயருள்ள சபையில் நாம் சேர்ந்துவிட்டு, இன்னொரு பெயருள்ள சபைக்கு செல்லும்போது அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லையே, அது ஏன் என்று எப்பொழுதாவது நாம் யோசிக்கிறோமா?
5. தேவன் ஒருவரே. அவர் தமக்குக்கொடுத்த வேதாகமம் ஒன்றே, ஒரே இரட்சகர் நமக்கு இருக்கிறார். அவரே தம் சபையைக் கட்டினார். ஆனால், இத்தனைப் பிரிவினைகள் எப்படி வந்தது?
6. ஆனால், கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஒற்றுமை யாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், 1கொரி. 1:9–10. இந்த ஒற்றுமை: சரியான விசுவாசம், புரிந்துகொள்ளுதல், கீழ்ப்படிதல், பரிசுத்தம், நீதி, நித்தியஜீவன், தேவனோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியம் போன்றவைகளோடு வருகிறது. இவைகள் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதது.
7. இவற்றை விளங்கிக் கொள்ளும்படி யோவான் சுவிசேஷம் 17 ஆம் அதிகாரத்தில் இயேசுவானவர் அனைவரும் ஒற்றுமையாயிருக்க ஜெபித்தார், அதை கவனிப்போமாக.

**I ஒற்றுமையை கவனிக்கும் முன்பு யாரால் நமக்கு நித்தியஜீவன் கொடுக்க முடியும் என்பதை கவனிக்க வேண்டும். யோவா. 17:2,3.**

அ. கிறிஸ்துவைத் தவிர வேறு யாராலும் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது. ஏனென்றால், மனிதருக்கு

ஆ. நித்தியஜீவனைக் கொடுக்கும் அதிகாரத்தைத் தேவன் இயேசுகிறிஸ்துவுக்கே கொடுத்திருக்கிறார். யோவா. 17:2.

இ. அப்போஸ்தலர்கள், மரியாள், பரிசுத்தவான்கள் மற்றும் தேவதூதர்கள் போன்றவர்களால் மனிதருக்கு இரட்சிப்பும் நித்திய ஜீவனையும், பரலோக வாழ்வும் கொடுக்க முடியாது, யோவா. 17 : 2; அப். 4 : 12; கொலோ.3:3; 1தீமோ.2:5–6;1யோவா. 5:11.

1. நித்தியஜீவன் என்றால்; பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரர் இயேசுகிறிஸ்துவையும் அறிந்துகொள்வது ஆகும். அறிந்து கொள்வது மட்டுமல்ல, அந்த அறிவின்படி நடந்துகொள்ளவும் வேண்டும்.

2. இன்றைக்கு நாம் தேவனையும், இயேசுவையும் அறிந்து கொள்ள அப்போஸ்தலர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை மட்டுமே நம்பவேண்டும். 1யோவா. 1:1–3.

3. இயேசுகிறிஸ்துதான் அப்போஸ்தலர்களுக்கு தேவனைப் பற்றிய சத்தியத்தை வெளிப்படுத்தினவர். யோவா. 1 : 18.
இயேசு கிறிஸ்துவினால் தம் அப்போஸ்தலர்களுக்கு வெளிப் படுத்தின இரட்சிப்பின் வசனங்கள் தேவனால் கொடுக்கப் பட்டு உறுதிசெய்யப்பட்டது. இதை நாம் அசட்டை செய்யக்கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் நம்மை எச்சரிக்கிறார். எபி. 2: 3–4,

4. இந்த ஒரே இரட்சிப்பின் திட்டத்தில் தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்தின இரட்சிப்பின் திட்டத்தின் படி அவருடைய ஒரே சபையில் நாம் இணைந்திருக் கிறோமா என்பதை நாம் உறுதிசெய்து கொள்ளவேண்டியது மிகமிக அவசியமாய் இருக்கிறது, 1கொரி. 12: 13.

5. நாம் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாலும் கிறிஸ்துவின் சபையல்லாத வேறுஒரு சபையில் இணைந்திருந்தால் நாம் தவறான இடத்தில் இருக்கிறோம் என்பது அர்த்தம் ஆகும்.

6. அறிகமும் இல்லாத, அவரைப்பற்றித் தெரியாத ஒருவரை நாம் நண்பராக ஏற்றுக்கொள்ளமாட்டோம். அப்படி நாம் தேவனையும் அவருடைய குமாரர் கிறிஸ்துவையும் அவர்களின் சித்தத்தையும் சரியாக அறிந்துகொண்டு நடப்பதுதான் ஐக்கியமாய் இருக்கிறது. தேவன் விரும்பாததைச் செய்வதினால் நமக்கு தேவனோடு ஒற்றுமை வராது.

**II இயேசுவானவர் வாழ்ந்து, மரித்து, உயிர்த்தெழுத்து, பரலோகம் சென்று ஏறக்குறைய 2000 வருடங்கள் ஆகிறது. இன்றைக்கு அவருடைய ஜீவனைத் தேட நாம் என்னசெய்ய வேண்டும்? யோவா. 12:48–50.**

அ. இயேசுகிறிஸ்து தேவனை அறிகிற அறிவு எல்லாவற்றையும் முதலாவது தம்முடைய அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தினார், அவர்கள் அதை விசுவாசித்துக்கைக் கொண்டார்கள். யோவா. 17:6–8 ; 15:15.

ஆ. கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் போதித்த போதனையை நம்பிக் கடைப்பிடிக்கிறவர்கள் உண்மையுள்ள சீஷர்கள், அப்படி செய்யாதவர்கள் உலகத்தாராய் இருக்கிறார்கள். இதுவே இருவருக்கும் உள்ள வித்தியாசம், யோவா. 17: 14 –16 ; 14 : 21 – 23,

இ. இயேசு கிறிஸ்துவானவர், தேவனுடைய குமாரனாயிருந்தும் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு தன் பிதாவினிடத்தில் அன்பாயிருந்தார்; அவருக்கே கீழ்ப்படிந்து அவரோடு ஐக்கியமாய் இருந்தார். யோவா. 15:10 ;5:19.

ஈ. அதேபோல வேதத்தில் சொல்லப்பட்ட நீதிமான்களும் தேவனுடைய வார்த்தைகள், கட்டளைகள் ஒன்றையும் மீறாமல் கைக்கொண்டு, தேவனுடைய சிநேகிதர்களாக வாழ்ந்தார்கள். அதில் நோவா, ஆபிரகாம், மோசே போன்றவர்களை உதாராணமாகச் சொல்லலாம். ஆதி. 6 : 22; 22: 18 ; யாத். 39 : 42 – 43 ; 40: 34–35.

உ. ஆனால், இன்றைக்கு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு சத்தியத்தையும் அதன் முறைமைகளையும் மட்டுமே கைக்கொள்ளவேண்டும் என்கிற நிபந்தனை இருக்கும்போது, அதை மீறி தங்கள் சொந்த இஷ்டமான கற்பனைகளைச் சேர்த்துக்கொள்ளுகிறவர்கள் எப்படி தேவனோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியமாயிருக்க முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். கொலோ. 3: 16 – 17.

ஊ. ஆகையினால் முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தைக் கைக்கொள்வதில் மிகவும் உறுதியாய் இருந்தார்கள், அப். 2: 42. ஏனென்றால், சரியான உபதேசத்தைக் கற்றுக்கொண்டு, அதைக் கைக்கொண்டு, அதில் நிலைத்திருந்தால் மட்டுமே தேவனுடைய மற்றும் அவருடைய குமாரர் இயேசுவினுடைய ஐக்கியத்தில் நிலைத்திருக்க முடியும் என்பதை அவர்கள் உறுதியாய் நம்பினார்கள், 1கொரி. 15: 1 – 2.

எ. கிறிஸ்துவின் உபதேசத்தைக் கைகொண்டு நடவாவிட்டால், பிதாவோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியம்கொள்ள முடியாது என்று கீழ்க்கண்ட வசனம் வலியுறுத்துகிறது. **கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்** 1யோவா. 9.

**III. நித்தியஜீவனைபெற பரிசுத்தம் அவசியமாய் இருக்கிறது. நாம் பரிசுத்தத்தை பெற என்ன செய்யவேண்டும்? யோவா. 17:17: எபி. 12:14.**

அ. எந்த சத்தியத்தால் பரிசுத்தம் வருகிறது? மோசே என்பவர் எகிப்து ராணியால் வளர்க்கப்பட்டார் என்கிற சத்தியத்தால் பரிசுத்தம் வரவில்லை.

ஆ. இன்றைக்கு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாட்டின் சத்தியத்தின் மூலமே பரிசுத்தம் வருகிறது, யோவா.17:17(8:31–32).

இ. இந்த சத்தியத்தை இயேசுவானவர் தம் போதனையின் மூலம் வெளிப்படுத்தினார், யோவா. 1:18.

ஈ. யோவா. 17 : 19 ன்படி தம் சீஷர்களைப் பரிசுத்தமாக்கும்படி, இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே பரிசுத்தமாக்கினார்.

1. இயேசுவானவர் எப்பொழுதுமே பரிசுத்தமாக வாழ்ந்தார்.
2. ஆனால், அவரையே பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது தம்மை பரிசுத்தப்படுத்தினார். லேவி.23:20.

**IV. நாம் ஒற்றுமைக் கொள்ளும்படி இன்றைக்கு நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். யோவா. 17:20–21.**

அ. இயேசுவானவர் முதலாவதாக அப்போஸ்தலர்களின் ஒற்றுமைக்காக ஜெபித்தார். இந்த வசனத்தில் இவர்களுக்காக என்பது அப்போஸ்தலர்களைக் குறிக்கும்.

ஆ. அவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிற வர்கள் என்பது இன்றைக்கும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தை யினால் தேவனையும் கிறிஸ்துவையும் விசுவாசிப்பவர்களைக் குறிக்கும்.

இ. அப்போஸ்தலர்களுடைய வார்த்தை அல்லது உபதேசத்தினால் மட்டுமே ஐக்கியம் அல்லது ஒற்றுமை வருகிறது. ஏனென்றால், அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தும் ஊழியமே செய்தார்கள், கலா. 1:10.

ஈ. கண்கண்ட சாட்சிகளான அப்போஸ்தலர்களால் போதிக்கப் பட்டு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு சத்தியத்தை கைக்கொள் வதினால் ஒற்றுமை வருகிறது, அப். 2:32.

உ. அப்போஸ்தலர்கள் போதித்த கிறிஸ்துவின் உபதேசத்தைவிட பிஷப், பாஸ்டர், பெற்றோர் போன்றவர்கள் போதிக்கும் தவறான உபதேசத்தின்மூலம் ஒற்றுமை வருவதில்லை.

ஊ. மனிதர்கள் மூலமாக தேவன் தம்முடைய பரம ஆசீர்வாதங்களை மனிதர்களுக்குக் கொடுக்கவில்லை!

கிறிஸ்துவின் மூலமாகவே அதைச் செய்ய திட்டமிட்டிருக்கிறார், எபே. 1:3.

**முடிவுரை:**

1. முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் போதித்த கிறிஸ்துவின் உபதேசத்தை இன்றைக்கு சரியாகப் போதிக்கிற நபர்களோடும், சபையாரோடும் மட்டும் நாம் ஐக்கியம் வைத்துக் கொள்ளவேண்டும்.
2. நாம் தெய்வீக ஒற்றுமை கொள்ளும்படி கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டும் கைக்கொள்ளவேண்டும். யோவா. 17: 20 – 21:2யோவா. 9–11.
3. கிறிஸ்து ஒருவரையே சபையின் தலைவராக ஏற்றுக் கொண்டு, அவருடைய சபையையே எல்லாவற்றிற்காகவும் நாம் சார்ந்துகொள்ளவேண்டும், எபே. 4:4–6,
4. நம் ஒரே தலைவரின் போதனையையும், கொள்கை களையும் பின்பற்றி அனைவரும் ஒரே மனம், ஒரே இருதயம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். அப்படியே முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அப். 2 : 46, 4 : 32.
5. புறஜாதிகள், அந்நியர், கள்ளப்போதகர்கள், சத்தியத்தை ஏற்காதவர்கள், சத்தியத்தின்படி நடவாதவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு, கர்த்தருக்கு ஊழியம் செய்கிறோம் என்று சொல்வதை கர்த்தர் ஏற்கமாட்டார். அது தேவஊழியமும் அல்ல, அது தேவனுடைய திட்டமும் அல்ல. 3யோவா. 7.
6. சத்தியத்தின்படி நடக்கிற கிறிஸ்துவின் சபையிலிருந்து மட்டும் தனி நபருக்கானாலும், ஊழியத்திற்கானாலும் உதவி கள் பெறலாம். அதுதான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது–
7. இப்பஜ நாம் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்துவானவர் தம் ஜீவனையே நமக்காகக் கொடுத்தார், எபே. 2: 16–17; 5: 26 – 27; 1யோவா. 1:1–3. இதை அழைப்பை அசட்டைசெய்யாமல் கிறிஸ்துவின் உபதேசத்தினால் ஒற்றுமை கொள்ள அழைக்கிறோம்.

✝

## ஒற்றுமைக்காக இயேசு ஜெபித்தார்

..... நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:21).

# உன்னை உயர்த்தி அழகு பார்க்கும் தேவன்

Bro. **பாண்டியன்**

**சி**று பிள்ளைகளுக்கு பெற்றோர் தாங்கள் விரும்பும் உடைகளை அணிவித்து அழகு பார்ப்பது வழக்கம். அதுபோலத்தான் எதிர்காலம் பற்றிய தெளிவில்லா நம்மை நம் அன்பின் பரலோகத் தகப்பனும் நம் தேவைகளை சந்தித்து போஷிக்கிறார். ஆண்டவர் இயேசுவும் காட்டுப் புஷ்பங்களைப் போல உங்களையும் உடுத்துவிப்பது அதிக நிச்சயம் என்கிறார். ஆக, நாம் மார்த்தாளைப் போல அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்படாமல், நம்மை உயர்த்த சித்தமுள்ளவராய் இருக்கும் அன்பின் தேவனைக் குறித்து சிந்திப்போம்.

வாக்குத்தத்தம் என்ற சிறப்பான வார்த்தையை வேதத்தில் மட்டுமே நாம் காண முடியும் 'பிராமிஸ்' என்ற ஆங்கில வார்த்தையைத் தான் தமிழில் அப்படி அழகாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பிறருக்கு நிச்சயம் செய்வதாகக் கூறி மனிதர் சத்தியம் பண்ணுவது போல – தேவன் மனிதனுக்கு செய்வதாகச் சொன்ன வார்த்தைகளே வாக்குத்தத்தம் எனப்படுகிறது. அதில் மிக முக்கியமானது மனித குலத்திற்கு தமது பரிசுத்த ஆவியானவரை தந்தருளுவது என்பது நாம் அறிந்த ஒன்றாகும் [அப். 1:5]. அரசியல் வாக்குறுதிகள் ஒருவேளை தவறலாம். ஆனால், தேவனுடைய நல் வார்த்தை ஒன்று கூட தவறிப் போகவில்லை என்கிறார் சாலமோன் [1ராஜா.8:55].

நம்பிக்கையூட்டும் அநேக வார்த்தைகளை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் போராட்டங்கள் நம்மை இஸ்ரவேலரைப் போல நிலைகுலையச் செய்து, நம் விசுவாசத்தைக் குறையச் செய்கின்றது. அப்படிப்பட்ட நேரங்களில் தேவனுடைய வார்த்தை மட்டுமே நம்மைத் தேற்றக்கூடிய சக்தி படைத்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஏனெனில், தேவனுடைய வார்த்தை உயிருள்ளது. பொறுப்பை ஏற்கத் தயங்கின மோசேயைப் போல நாம் இல்லாமல் தேவனை நம்பி காரியத்தில் இறங்கின தாவீதைப் போல இருக்க வேண்டும் [1 சா. 17:37]. அதற்கு தேவன் நமக்கு ஏற்கெனவே செய்து இருக்கும் நன்மைகளை நினைத்துப் பார்க்கும் அறிவு வேண்டும். அந்த ஞானத்திற்காக நாம் ஜெபிக்க வேண்டும். அப்போதுதான் நாம் தற்போதைய சூழ்நிலைகளை மேற்கொள்ள முடியும் என்பது தான் வேதம் காட்டும் வழி.

தேவன் நம்மை உயர்த்த சித்தள்ளவராய் இருக்கிறார் என்பதை சில வாக்குத்தத்தங்களின் மூலம் ஆராய்வோமாக.

முதலாவது, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன் (ஆதி. 12:2). தேவனை அறியாத ஜனத்தின் மத்தியிலிருந்த ஆபிராமை அழைத்து அவனைத்திரளான ஜாதிகளுக்கு தகப்பன் என்று அர்த்தம் கொள்ளும் ஆபிரகாம் என்று பெயரிட்டு தேவன் அவன் வாழ்க்கையில் அவனை உயர்த்தினார். அந்நிய தேசத்தில் இருந்த அவனிடம் தேசத்து ராஜாவே வந்து இதோ என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. உன் பார்வைக்கு சம்மதியான இடத்திலே குடியிரு (ஆதி. 20:15) என்றும் பிற்பாடு, தேவன் உன்னோடே இருக்கிறார் என் தேசத்திற்கும், என் குடும்பத்திற்கும் நீ தயவு செய்ய வேண்டும் என்று சொல்லுமளவு தேவன் அவனை உயர்த்தினார் என்று பார்க்கிறோம். கலா. 3:9ன் படி விசுவாச மார்க்கத்தார் ஆபிரகாடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். எனவே, உன்னையும் தேவன் பெருமைப் படுத்துவார் என்று நம்பு!

இரண்டாவது, உன்னை நிலைப்படுத்துவேன் என்று தாவீதுக்கு சொன்னது ( 2 சா. 7:12,16) தேவனுக்குப் பிரியமாக தன்னை மாற்றிக் கொண்டு வாழ்ந்த தாவீது ராஜாவுக்கு அவர் உன் வீடும் ராஜ்யமும் என்றென்றும் நிலை பெற்றிருக்கும் என்ற சபையைக் குறித்தான வாக்கைப் பெற்றான். பொதுவாக குடும்பமாகிய வீடு பெண்களால் தான் கட்டப்படுகிறது (நீதி. 14:1). ஆகவே, ஒரு குடும்பம் நிலையாயிருக்க புருஷர்கள் தங்கள் மனைவியை நேசித்து அவர்களுக்கு உதவியாயிருக்க வேண்டும். நீ தேவனுக்கு செவி கொடுக்கும் போது அவர் உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார் (உபா.28:9).

மூன்றாவது, உன்னை மேன்மைப்படுத்துவேன் (யோசுவா 3:7) இஸ்ரவேலரை வழிநடத்த யோசுவாவிடம் தேவன் சொன்ன இந்த வார்த்தையின்படியே ஜனங்கள் யோர்தானை அற்புத விதமாக கடக்க செய்து அவர்கள் கண்களுக்கு முன்பாக யோசுவாவை மேன்மைப்படுத்தினார். இன்றும் ஊழியர்களுக்கு உதவியாய் இருக்கிறவர்களை தேவன் உயர்த்த சித்தமாக உள்ளார்.

நான்காவது, உன்னைத் திடப்படுத்துவேன் என்கிறார். ( 1 நாளா. 28:7). சாலமோன் ராஜா ஆரம்ப நாட்களில் தேவனுக்குப் பிரியமாக நடந்த போது தொடர்ந்து அவன் அவ்வாறு நடக்கும் பட்சத்தில் அவன் ராஜ்ஜியத்தை திடப்படுத்துவேன் என்றார். நம்மில் அநேகர் இரட்சிக்கப்பட்ட புதிதில் இருந்த விசுவாசத்தைக் கை விடுகிறோம். ஆனால், நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றினால் கிறிஸ்துவினிடத்தில் பங்கு உள்ளவர்களாய் இருப்போம் என்கிறது வேதம் (எபி. 3:14).

ஐந்தாவதாக, உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன் (யாத். 23:26). நீண்ட நாட்கள் வாழ மனிதன் பல முயற்சிகளையும்

எடுத்தாலும் தேவனே ஆயுசு பெருகப் பண்ணுகிறவர். அவர் கட்டளைக்கு செவி கொடுக்கும்போது வியாதிகளுக்கு விலகி காப்பார் (யாத். 15:26). ஆயுசு மட்டுமல்ல பரிபூரண நன்மைகளை உண்டாகவும் கட்டளையிடுவேன் என்றார். (உபா.28:11)

ஆறாவதாக, உன்னைக் கனப்படுத்துவேன் என்பதே (சங். 91:15) அவர் வாக்காக உள்ளது. யாரை தப்புவித்துக் கனம் பண்ணுவார் ? சபையாரை – அதாவது உன்னதமானவரின் மறைவும் சர்வ வல்லவருடைய நிழலும் அவருடைய ராஜ்ஜியமாகிய சபையில் மாத்திரமே கிடைக்கும். அதையே கிறிஸ்து ஒருவன் என்னை பின்பற்றினால் பிதாவானவர் அவனைக் கனம் பண்ணுவார் என்றார். (யோவா. 12:26)

இறுதியாக, உன்னை சந்தோஷப்படுத்துவேன் என்பதே (எரே. 31:12,13) நாம் ஜெபிக்கும்போது நம் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார். துயரத்திற்குப் பதிலாக ஆனந்தம் தரவே இயேசுவை தேவன் அனுப்பினார் (ஏசா. 61:3) அவர் தரும் சந்தோஷத்தை ஒருவனும் எடுத்துப் போட மாட்டான் (யோவா. 16:22) ஆமென். ✝

---

### *கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலினால்...*

*1. இரட்சிப்பு வந்தது - ரோமர் 10:9-10*

*2. நீதிமான் என்ற பட்டம் கிடைத்தது - ரோமர் 4:25*

*3. தேற்றரவாளன் கிடைத்தார் - அப்போஸ்தலர். 2:33*

*4. சபை உருவாயிற்று - அப்போஸ்தலர். 2:47*

*5. மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டதால் மரண பயத்திலிருந்து விடுதலை கிடைத்தது - எபிரேயர். 2:15*

*6. அவரோடு கூட உட்காரும் சிலாக்கியம் கிடைத்தது - எபேசியர் 2:7*

*7. நமக்காய் பரிந்து பேசும் ஒரு பிரதான ஆசாரியர் கிடைத்தார் - எபிரேயர். 10:12*

# ஒன்று செய்கிறேன் (பிலி. 3:11-17)

**சகோ. K.M. பிலிப் – பவானி**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் யாவரையும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். பிலி. 3:13 இந்த வசனப் பகுதியில் ஒரு கிறிஸ்தவனின் விசுவாச வாழ்க்கை நிலைத்திருக்க இலட்சியம் நிறைவேற செய்ய வேண்டியதை சுருக்கமாக, ஆழமாக பவுலடியார் எடுத்துரைக்கிறார். அது மட்டுமல்ல **ஒன்று செய்கிறேன்** என்று முடிவெடுத்த நாளிலிருந்து அந்த ஒன்றையே செய்து வந்தார். வெறும் வார்த்தை மட்டுமல்ல அதுதான் அவருடைய அனுபவமாக இருந்தது என்று ஆவியானவர் ஆமோதிக்கிறார். **சகோதரரே நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்** என்பதை (பிலி. 3:17) எடுத்துக் காட்டுகிறார். அதைப் பிடித்துக் கொள்வதில் கட்டாயமல்ல, ஆசையாய்த் தொடர்கிறேன் (12) என்கிறார். ஆம், யாதொன்றையும் சிறப்பாக செய்து முடிக்க ஆசை (விருப்பம், பிரியம்) வேண்டும். பள்ளியில் படிக்கும் மாணவன் மனதில் நான் ஆசிரியராக, கலெக்டராக, மருத்துவராக ஆக வேண்டும் என்ற ஆசையோடு படிக்க ஆரம்பித்தால் தான் அந்த இலக்கை அடைவான். ஒரு நல்ல வீடு, நல்ல வேலை, நல்ல மனைவி – கணவன், நல்ல பிள்ளைகள் என்று எத்தனையோ ஆசைகள் மனிதனுக்குண்டு. அது தேவை தான். ஆனால், இவைகளுக்கெல்லாம் முதல் படியாய் அமைவது பவுல் சொல்கின்ற அந்த ஒன்றுதான், – **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர்கிறேன்** என்பதாகும் (14). ஆம், ஓர் கிறிஸ்தவனாக வாழ்வேன் என்ற அந்த ஒன்றைச் செய்ய முடிவெடுத்தால், அதில் நிலைத்து நின்றால் இவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும்.

ஒன்று செய்கிறேன் என்று பவுல் முடிவெடுத்ததற்கு முன் அவர் ஒன்றுமே செய்யவில்லையா? பொதுவாக ஒரு மனிதன் உலகில் பிறந்து வாழ்ந்ததற்குரிய தடயங்கள் வேண்டும். வெறும் புசிப்பும், குடிப்பும் வாழ்க்கையல்ல. பவுல் நியாய சாஸ்திரி. கமாலியேல் பாதத்தருகே வளர்ந்து கல்வி கற்றவர். யூதனாகிய பவுல் யூத மார்க்கத்தில் வைராக்கியமுடையவர். பிரதான ஆசாரியரும், மூப்பர்களும் சாட்சி கூறும் அளவுக்கு நியாயப்பிரமாணத்தின்படி யான பக்தி வைராக்கியத்திற்காகப் பாடுபட்டவர். இவ்வளவு பெரிய சாதனைகளை செய்திருந்த போதிலும், இப்பொழுது அவைகளை யெல்லாம் பவுல் நஷ்டமாகவும், குப்பையுமாக எண்ணுகிறார். ஆம், கிறிஸ்துவின் புதிய பிரமாணமாகிய பூரண பிரமாணத்திற்கு

எதிராகச் செய்ததெல்லாம் வீண் என்றும் பாரம்பரியம், பக்தி, பட்டம், பதவி, குலம் கோத்திரம், பெருமைகள் எல்லாம் ஒன்றும் இல்லை; குப்பை என்று சொல்லுகிறார். எப்பொழுது கிறிஸ்துவின் ஜீவனுள்ள வார்த்தைகள் என்னைத் தொட்டதோ, அப்பொழுதிலிருந்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசித்து அர்த்தமுள்ள ஒன்றையே செய்ய என்னை ஒப்புக்கொடுத்தேன். என்று வைராக்கியமாய் சொன்னார் அதையே செய்தார் (அப். 9:3-6,17,18). ஆம், வாழ்க்கையில் எத்தனையோ முடிவெடுக்கிறோம். ஆனால், கிறிஸ்தவனாக வாழ எடுக்கும் முடிவே சரியான ஒன்றாக்கும். நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்த சிந்தையாய் இருக்கக் கடவோம் (15).

**ஒன்று செய்கிறேன்** - என்று முடிவெடுத்ததில் பவுலின் செயல்பாட்டை கவனிப்போம். பவுல் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட உடனே, **ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?** என்று கேட்டதில் இயேசுவின் சித்தம் செய்ய அவருடைய ஆலோசனைக்கு தன்னை முழுவதும் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார் (அப். 9:6). அனனியா மூலம் கேட்ட தேவ செய்திக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (18). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பவுல் தேவன் விரும்பும் ஒன்றை செய்வதில், தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான் (20). அந்த ஒன்றை செய்வதில் காலம் தாழ்த்தவில்லை. அன்பானவர்களே! நாம் கூட தேவ செய்தி கேட்டு ஞானஸ்நானம் பெறும்போது. இனிமேல் **ஒன்றை செய்வேன்** என்று முடிவு எடுத்தோம். அது ஒருவேளை 1,2,5,10,20 வருடங்களை கடந்திருக்கலாம். கிடைத்த இந்த நாட்களில் கிறிஸ்துவுக்காக, சபைக்காக தாமதமின்றி உடனே செய்த செயல் என்ன? ஒன்று செய்கிறேன் என்று முடிவெடுத்த நாம் ஒரு ஆத்துமாவையாவது சபையில் சேர்த்திருக்கிறோமா? குடும்பமாக சபைக்குச் செல்கிறோமா?

பவுல் அந்த ஒன்றுக்காக ஒன்று குறைய நாற்பது அடியாக 5 தரம் அடிக்கப்பட்டார். மூன்று முறை மிலாறுகளால் அடிபட்டார் கல்லெறியுண்டார். பசியிலும், தாகத்திலும், குளிரிலும், காவலிலும், நிர்வாணத்திலும் இருந்திருக்கிறார் (2 கொரி. 11:24-27). பிரியமானவர்களே, பவுலோடு நம்மை ஒப்பிட்டு பாருங்கள். ஆத்தும ஆதாயம் செய்வதில் நமக்கு கிடைத்துள்ள சுதந்திரத்தை, நன்மையான வாய்ப்புகளை சிந்தித்துப் பாருங்கள். இன்றே இரட்சண்ய நாள். எலிசாவின் நாட்களில் நான்கு குஷ்டரோகிகளின் உள்ளத்தில் தன் மக்களைக் குறித்து எழுந்த நியாயமான கேள்வியை சிந்தித்துப் பாருங்கள்; இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மௌனமாயிருந்து பொழுது விடியுமட்டும்

காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். இப்போதும் நாம் போய் ராஜாவின் அரண்மனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்று சொல்லி உடனே புறப்பட்டுச் சென்று அறிவித்த செய்தியால் ஒரு பட்டணத்து மக்களின் பட்டினியை போக்கி மாபெரும் சந்தோஷத்தை உருவாக்கினார்கள் (2 ராஜா. 7:1-20). இந்த குஷ்டரோகிகளின் **நற்செய்தி அறிவிக்கும்** அந்த ஒன்றை செய்ய நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? அதில் உறுதியாய் செயல்பட்டால், உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நம்மை அவர் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வார் (ஏசா. 26:3).

ஒன்று செய்கிறேன் என்று சொன்ன பவுலடியார் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட அநேக காரியங்களை நமக்கு முன்வைத்திருக்கிறார். அதே சமயம் நம் ஆத்துமா இரட்சிப்பு நிறைவேற, இலக்கை நோக்கித் தொடர நாம் செய்ய வேண்டியது ஒன்று உண்டு என்பதை இங்கு வலியுறுத்துகிறார். ''சகோதரரே... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கித் தொடர்கிறேன்'' (பிலி. 3:13,14) என்கிறார். பின்னானவைகள் என்பது கி.மு. - கி.பி என்பது போலாகும். அதாவது, ஒருவர் தன் வாழ்க்கையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பு என்றும், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பும் என்று புரிந்து கொள்வோம். ஆம், இப்பொழுது பெற்றிருக்கிற இந்த விசுவாசம் வாழ்க்கையை மீண்டும் பின்னுக்கிழுக்கிற பின்னானவைகள் எல்லாவற்றையும் மறந்து விட வேண்டும். மீண்டும் அவைகளை அசை போடக்கூடாது மறந்து விட்டு விட வேண்டும். நாய் தான் கக்கினதைத் தின்னவும் கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போலவுமான இழிவான நிலைக்கு போய் விடக்கூடாது (2 பேதுரு 2:22). பின்னானவைகளை மறக்கத்தான், ''இரவும், பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருங்கள்'' (சங்.1:2). இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். சபையின் பணிகளில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். கர்த்தரை நம்பி எப்பொழுதும் நன்மை செய்யுங்கள் (சங். 37:3). இவ்விதமாய் உன் இருதயத்தை நிரப்பிக்கொள். பின்னானவைகள் மறந்து போகும். இயேசுவின் உவமையில் இளைய மகன் தகப்பனை விட்டு பிரிந்ததால் தீயவர்கள் அவனோடு இணைந்து கொண்டார்கள். விரைவில் எல்லாவற்றையும் இழந்து பன்றி தின்னும் தவிடு கூட கிடைக்காத பரிதாபகரமான நிலையை அடைந்தான். அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அவன் புத்தி தெளிந்தது. அதை அவன் சரியாய் சிந்தித்து சிறந்த முடிவை எடுத்து செயல்பட்டான். ஆம், பின்னானவைகளை, பாவமான தீமையான பொல்லாங்கான வாழ்க்கையை முற்றிலும் மறந்தான். தனக்கு முன்னால் தன் தகப்பன் வீட்டை நிறுத்தினான். நாடிச்

சென்றான். தகப்பன் வீட்டில் அவன் எதிர்பார்த்ததற்கும் மேலான மகிழ்ச்சி, ஓயா இன்பம், சமாதானம் கிடைத்தது. ஆம், நாம் நம்மை இழிவு படுத்திய பாவ வாழ்க்கையை விட்டு விலகி, நற்செய்தியினால் புத்தி தெளிந்து தகப்பன் வீட்டை (சபையை) நாடி வந்திருக்கிறோம். இங்கு நித்திய மகிழ்ச்சி, ஓயாத இன்பம், நீடிய சமாதானம் உண்டு. இருந்தும் பின்னான பாரம்பரியம், பண்டிகைகள், வேடிக்கை, ஆரவாரம் என்று மீண்டும் பின்னிட்டுப் பார்த்தால் நாம் செயலற்ற உப்புத்தூண் ஆகிவிடு வோம் (ஆதி. 19:26). பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாக மாறிவிடும் என்பதை தயவு செய்து மனதில் வைத்து பின்னானவைகளை முற்றிலும் மறந்து தேவ ஞானமுள்ளவர்களாய் வாழ்வோம்.

இயேசுவும் எச்சரிப்பதை கவனியுங்கள்; கலப்பையின் மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு தகுதியுடையவனல்ல (லூக்கா 9:62). அன்பான தேவ ஜனமே! உன் பரிசுத்த வாழ்க்கைக்கு தடையாயிருக்கிற, பின்னுக்கு இழுக்கிறது எதுவாக இருந்தாலும் (சங். 45:10படி) மறந்துவிடு. ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும் பதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் (எபி. 6:4,6). அன்பானவர்களே! யோசேப்பைப் போல பின்னானவைகளை முற்றிலும் மறந்து விடுங்கள். கர்த்தர் எப்பொழுதும் யோசேப்போடு இருந்து அவன் காரிய சித்தியுள்ளவனாய், பாவத்திற்கு விலகினவனாய் மற்றவர்களைத் தேற்றுகிறவனாய் வாழ்வித்தார். அவன் நாட்களில் எப்பொழுதும் எங்கும் சமாதானமே. நம் பின்னான வாழ்க்கை குறுகியது. ஆனால், நமக்கு முன்னால் இருக்கும் நித்திய வாழ்க்கை நீடித்தது. அந்த இலக்கை நோக்கி விரைந்து ஓடும் ஒன்றையே செய்வோம். பந்தயப் பொருளை சுதந்தரிப்போம். ஆமென்!! ✝

## கர்த்தர் அருளும் பெலன்

1. சோர்ந்து போகும்போது... – ஏசாயா 40:29
2. காத்திருக்கும்போது... – ஏசாயா 40:31
3. துதிக்கும்போது... – தானி 3: 16-17
4. தியானிக்கும்போது... – சங்கீதம் 1:1-3
5. விசுவாசிக்கும்போது... – ஆதி 15:6




# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6:30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Date Of Publication: 17/18 th of Every Month
Date Of Posting: 20/21 of Every Month
Place Of Posting: Erode HPO


**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

















**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6:30 – 7:00 மணி
வெள்ளி காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.